10வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை®

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 JULY 15, 2000 பாலம் 14



❄ வாழ்வின் முழுமைக்கு - தியானம்! (பக். 4)

❄ குடும்ப வாழ்வின் முரண்பாட்டிற்கு பெயர் கூறிஅழைப்பது காரணமாகுமா? (பக்.10)

❄ மனிதர் பயப்படும் கிரகம் எதுவாகும்? (பக். 9)

❄ புதிய கார் வாங்குவதாயின் 2000 / 2001 மொடல் சிறந்தது? (பக். 03)

❄ திருமணம் செய்யும் போது ஜீன் கட்டமைப்பா, சாதகம் பார்த்தலா சிறந்தது?(பக்.2)

❄ "வெள்ளிக்கிழமை" ஹீரோ - ஜெய்சங்கர் (பக்.7)

❄ முரசு வியாதியைத் தடுப்பதற்கு? (பக். 11)

❄ 'Singer' போட்டியில் இலங்கை முன்னணியில் (பக். 6)





RE/MAX
Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

MEMBER OF RE/MAX HALL OF FAME

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
SABONA
& Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- உண்மையை உறுதியாகப் பிடி, சுயநலம் கொள்ளாதே, ஆசையை அகற்று. அப்போது நீ தூயபொருள் ஆகிவிடுவாய்.
- பகல் வேளையில் வானத்தில் நஷத்திரங்கள் தென்படுவதில்லை. ஆகையால் பகலில் வானத்தில் நஷத்திரங்கள் இல்லையென்று இயம்பலாகாது. அஞ்ஞான நிலையில் மனிதனுக்குக் கடவுள் தென்படுவதில்லை. ஆகையால் கடவுளே இல்லை யென்று அவன் இயம்பலாகாது.
- சுயநலமே வடிவெடுத்திருப்பவன் துராத்மன் - கீழ் மகன். பாமரர்க்காகவென்று யாருடைய உள்ளம் உருகுகிறதோ அவன் மகாத்மாவாகிறான்.
- முயற்சியில்லா மனிதன் கீழோன் ஆவது திண்ணம். முயற்சியே வடிவெடுத்திருப்பதற்கு இடையில் எல்லாவிதமான பந்த பாசங்களினின்று விடுதலை யடைந்தவனே நிறை மனிதன் ஆகிறான்.
- உனது பாரத்தைக் குறைக்க வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்தனை பண்ணாதே. பாரத்தைத் தாக்குதற்கான அதிக பலம் தரவேண்டுமென்று பிரார்த்தனை பண்ணு.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## பராகுவே (Paraguay)

தென் அமெரிக்காவில் பிறேசில் [Brazil], ஆர்ஜென்தீனா (Argentina) பொலிவியா (Bolivia) ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்ட ஒரு நாடே "பராகுவே" (Paraguay) ஆகும்.

**பரப்பளவு:** 157,047 ச. மைல்கள்

**மக்கள் சனத்தொகை:** 4,519,000 பேர் (1992ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி)

**தலைநகரம்:** அசுன்சியான் (Asuncion)

**சுதந்திரம்:** மே 14, 1811 இல் ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் கிடைத்தது

**மொழி:** ஸ்பானிஷ் உத்தியோக மொழியாகும்

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் 90%

ஜனாதிபதி, மந்திரி சபை என்னும் நிறைவேற்றுத் துறை அதிகாரத்தின் கீழ் பத்தொன்பது திணைக்களங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடாத்தப்படுகின்றது. காட்டு வளங்கள் நிறைந்த நாடு 1982-86ஆம் ஆண்டுகளில் பணவீக்கம், வெளிநாட்டு கடன்கள் இந்நாட்டில் அதிகரித்துக் கொண்டே சென்றது. 5 தினசரிப் பத்திரிகைகள் இங்கு மொத்தமாக வெளிவருகின்றது. இங்கு விஜயம் செய்வதற்கு பாஸ்போட் மட்டும் போதுமானது.

## உன்னை அறிந்தால்

ஒரு நாட்டில் இருக்கும் போது அதற்கேற்றவாறு நாங்கள் நடக்கப் பழகுதல் வேண்டும். இது ஒரு ஆங்கில பழமொழி. அதற்காக கூடாத பழக்கங்களைப் பழகுதல் வேண்டுமென்ற கருத்தல்ல. எம்மில் பல வயதுள்ள ஆண், பெண் இருபாலாரும் தாய்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்துள்ளோம். பலர் இலகுவான ஸ்பொன்ஸர் முறையாலும் வந்துள்ளார்கள். பின்னால் வந்த இவர்கள், முன் வந்தவர்கள் அடைந்த கஷ்டங்கள், நஷ்டங்களை உணர்வு பூர்வமாக அனுபவித்திருப்பார்களா என்பது ஒரு கேள்விக்குறி?

அதிருக்க, எம்மில் பலர், குறிப்பாக வயதில் முதிர்ந்தவர்கள், வீதிகளில் சாரத்துடன், கால்பாதணிகளும் போடாமல் நடந்து திரிவது சரியா, வயதுமுதிர்ந்த பெண்கள், தெருக்களில் சின்னப்பிள்ளையில் சோறு ஊட்டுவது சரியா? இப்படி செய்வது சரியா? தவறா? யார் சொல்வது? யாரிற்கு? பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்தான் சொல்லவேண்டும், அவர்கள் சொல்லாமல் இருப்பதற்கும் சில காரணங்கள் இல்லாமலும் இல்லை?

**நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதே நடக்கும்.**
**நாளை நமதே. வெற்றி நமதே!!**

**-நெற்றிக்கண்ணன்**

**உலக தமிழோசை மூலம் ஆக்கங்கள் தருபவர்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்**




SINGAPORE CELLUAR

$25.00 +Taxes 200min/Month

PAGER $5.95/Month Unlimited

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (61)



-விஜே குலத்துங்கம்

இரண்டு வாரங்களுக்கு முன்னர், ஒரு முக்கியமான விஞ்ஞான ஆராய்ச்சி முடிவு பற்றி அறிவிக்கப்பட்டது. இது எவ்வளவு முக்கியமானது என்பதைக் கணிக்கும் போது, அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனும், பிரித்தானிய பிரதமரான டொனி பிளாயரும் சேர்ந்து, ஒரு பத்திரிகை மகாநாட்டை மற்றைய விஞ்ஞானிகளுடன் சேர்ந்து கூட்டி இச் செய்தி வெளிவிட்டதைப் பார்க்கும் போது இதன் முக்கியத்துவத்தை நாம் உணரலாம். இச் செய்தி ஜுன் மாதம் 26ஆம் திகதி வெளிவிடப்பட்டது. இதை பல தொலைக்காட்சி சேவைகள் நேரடி ஒளிபரப்பாக செய்திருந்தார்கள். இந்த முக்கியி நிகழ்வு என்னவெனில், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து கடந்த சில வருடங்களாக Human Genome Mapping எனப்படும் மக்களின் குணாதியங்களை நிர்ணயிக்கும் 60,000 தொடக்கம் 100,000 வரையிலான Gene கள் பரம்பரை அலகுகளின் அமைப்பை, அவை நிறமூர்த்தங்களில் எங்கு அமைந்துள்ளன, எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை கண்டறிந்துள்ளார்கள்.

மேற்கூறிய பத்திரிகை மகாநாட்டில் பில் கிளின்டன் பேசும்போது இதுவரை மனித இனத்தால் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் - Map களில் தலைசிறந்தது இந்த Genome Map என்று கூறியுள்ளார். டொனி பிளாயர் பேசும் போது 21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சாதனையாக இது விளங்கும் எனக் கூறினார். கிளின்டன் மேலும் பேசும் போது இவ்வளவு காலமும் கடவுளுக்கு மாத்திரமே தெரிந்திருந்த விடயத்தை மனிதன் கண்டு பிடித்து விட்டான் எனக் கூறினார். இதை எமது பேச்சு வழக்கில் கூறினால் மனிதனை பிரம்மன் படைக்கும் போது எழுதியதை மனிதன் கண்டறிந்து விட்டான் எனக் கூறலாம். அது மாத்திரம் அல்ல, இன்னும் 10-20 வருடங்களில் இதை மாற்றியமைக்கும் வல்லமையையும் மனிதன் பெற்றுவிடுவான்.

மனிதரின் மற்றும் உயிரினங்களின் இயல்புகளை அல்லது குணாதிசயங்களை தீர்மானிப்பது, நிற மூர்த்தங்கள் ஆகும். மனித உடலின் கலங்களில் 23 சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு நிறமூர்த்தங்களிலும் பல்லாயிரக்கணக்கான Gene கள் - பரம்பரை அலகுகள் உண்டு. இந்த ஜீன் ஒவ்வொன்றும் வெவ்வேறு இயல்புகளை குணாதியங்களை தீர்மானிக்கின்றது. இந்த Gene களின் அடிப்படைக் கட்டமைப்பு DNA எனப்படும். DNA இன் இரசாயன அமைப்பு A,C,G,T ஆகிய குறியீட்டினால் குறிப்பிடப்படும். இந்த குறியீடுகளின் வெவ்வேறு சேர்க்கைகளின் கட்டமைப்புகள் ஏறக்குறைய மனித உடலில் 3.5 பில்லியன் வரை உண்டு. இப்படியான ஒவ்வொரு Gene களின் கட்டமைப்புகள் எல்லாவற்றையும் தற்போது கண்டறிந்துள்ளார்கள். அவற்றிற்கு பெயரிட்டு குறிப்பிட்ட Gene களின் தொழிற்பாட்டையும், அவை எந்தெந்த இயல்புகளை கட்டுப்படுத்துகின்றன என்பதையும் அறிய இவை உதவும்.

தற்போதைய கண்டுபிடிப்பான இந்த முதற்படியைத் தொடர்ந்து, பல்வேறு ஆட்களின் கட்டமைப்பை அறிந்து அவற்றை ஒப்பிடுவதன் மூலம் பல தரப்பட்ட நோய்களை உருவாக்கும் Gene களின் அமைப்பை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நோயை உடையவரின் Gene கட்டமைப்பையும், ஆரோக்கியமானவரின் கட்டமைப்பையும் ஒப்பிடுவதன் மூலம், நோயை உண்டாக்கும் Gene கட்டமைப்பை அறியலாம். எனவே பிறந்த குழந்தையின் அல்லது பிறக்கப்போகும் குழந்தையின் Gene கட்டமைப்பை அறிவதன் மூலம், அக் குழந்தைக்கு எதிர்காலத்தில் எவ்வகையான நோய்கள் வரக்கூடும் என்பதை ஆரம்பத்திலேயே கண்டறியலாம்.

ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இன்னும் 20-25 ஆண்டுகளில், ஒருவர் மருத்துவரிடம் செல்லும்போது, எங்கள் ஒவ்வொருவரினதும் Gene கட்டமைப்பு அவரிடம் இருக்கும். அதை வைத்தே நோய்களைக் கண்டுபிடித்து அதன் மூலமாகவே அதற்குரிய சிகிச்சையை அளித்து விடுவார்கள். நீரிழிவு நோய், புற்றுநோய், அல்சைமா போன்ற வியாதிகள் மற்றும் இருதய நோய்கள் பரம்பரை வியாதிகள் ஆகும். இவற்றை குழந்தையாக இருக்கும்போதே Gene கட்டமைப்பு மூலம் அறிந்து விடலாம். எனவே சிறு வயதிலேயே இதற்குரிய முன்னேற்பாட்டையும், சிகிச்சையையும் அளிக்கத் தொடங்கலாம். எனவே இதை வைத்திய சிகிச்சையில் ஒரு திருப்புமுனை எனக் கூறலாம்.

இதன் மூலம் சில தீமைகள், குறைபாடுகளும் ஏற்படலாம் எனவும் கூறுகின்றார்கள். எதிர்காலத்தில் காப்புறுதி செய்யும்போது எங்கள் Genone Map ஐக் காட்டுப்படி கூறலாம். இதனால் நோய் வரும் என்று தெரிபவர்களுக்கு ஆயுள் காப்புறுதி மறுக்கப்படலாம். ஒரு வேலைக்கு மனுச் செய்யும்போதும், வேலை கொடுப்போர், ஒருவர் ஆரோக்கியசாலி என்றறிய இந்த Gene அமைப்பை காட்டும்படி கேட்கலாம்.

எதிர்காலத்தில் நம்மவர்கள் கல்யாணம் பேசும்போது சாதகங்களை சாத்திரிமாரிடம் காட்டுவது போல, Gene Map ஐயும் பார்வையிடலாம். சாதகத்தை எமக்கு சாதகமாக மாற்றினாலும் Genome Map ஐ மாற்ற முடியாது.

Michael Dexter என்ற விஞ்ஞானி பேசுகையில் சந்திரினுக்கு மனிதனை அனுப்பியதை விட, கடினமானதும், அதை விடச் சிறந்த சாதனையாகும் எனவும் கூறியுள்ளார்.

*******************************************************


*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 109




**இடமிருந்து - வலம்**

1. சிலை
4. அடுப்பு
5. கரு வளரும் இடம் (வல-இட)
6. தற்போதைய இந்தியப் பிரதமர் (
7. விஷ்ணு
8. கடினம் (வல - இட)
9. தாலி அணிந்த பெண்



**மேலிருந்து கீழ்**

1. குதர்க்கம்
2. கண்ணில் உள்ள குறைபாடு ஒன்று
3. ஏர்
4. தோன்று (கீழ்-மேல்)
5. ஒரு வைரமான மரம்
10. நினைவின்மை (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JULY 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.




**#108இல் வெற்றி பெற்றோர்**

1) N. அகிலன், Mississauga, Ont.
2. ஞானதயாளன் பரமசாமி, Toronto, Ont.




*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

**Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12**

**Professional Photographer - கதிர்**



☎: (416) 750-8118

*2381 EGLINTON AV. E.*

*KENNEDY/ EGLINTON, SCARBOROUGH*


## திருக்குறள் தரும் அறிவுரைகள்



***சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா***
***செய்யாமை மாசற்றார் கோள்.*** திருக்குறள்

மிகுந்த செழிப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறக் கூடுமென்றாலும் அதன் பொருட்டு பிறருக்குக் கேடு செய்யாமலிருப்பதே மாசற்றவர்களின் கொள்கையாகும்.

***அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை***
***இகழ்வார்ப் பொறுத்தல் தலை.*** திருக்குறள்

தன்மீது குழி பறிப்போரையே தாங்குகின்ற பூமியைப் போல் தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களின் செயலையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும்.

***பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை***
***மறத்த லதனினும் நன்று.*** திருக்குறள்

அளவுகடந்து செய்யப்பட்ட தீங்கைப் பொறுத்துக் கொள்வதைக் காட்டிலும், அந்தத் தீங்கை அறவே மறந்து விடுவதே சிறந்த பண்பாகும்.

***இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்***
***வன்மை மடவார்ப் பொறை.*** திருக்குறள்

வறுமையிலும் கொடிய வறுமை, வந்த விருந்தினரை வரவேற்க முடியாதது. அதைப்போல வலிமையிலேயே பெரிய வலிமை அறிவிலிகளின் செயலைப் பொறுத்துக் கொள்வது.

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி யொழுகப் படும்.** திருக்குறள்

பொறுமையின் உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## எது சிறந்தது?



புதிய வாகனங்களை பலரும் வாங்கும் நேரம் இது. சிலர் அடுத்த ஆண்டுக்கான மொடல் வரும்வரை காத்திருப்பவர்களும் உண்டு. அதேவேளை பலர் வெயில் காலத்தில் குளிர்மையாக புதிய வாகனங்களை ஓடலாம் என்று சிந்திக்கின்றனர். இந்த விடயத்தில் பல நன்மை தீமைகள் இருப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நான் வாங்கும் வாகனத்தை தொடர்ந்து வைத்திருக்கப்போகிறேன் என்ற பட்சத்தில் 2000 ஆண்டுக்கான வாகனத்தை தெரிவு செய்து வாங்குவதன் மூலம் பல நன்மைகள் கிடைக்க முடியும். அதாவது புதிய மொடல் வருவதற்கு முன்னர் எல்லா 2000 ஆண்டு வாகனங்களையும் அப்புறப்படுத்தியாகவேண்டும் என்ற ரீதியில் உங்களுக்கு நல்ல விலையும் நல்ல வட்டி வீதங்களும் கிடைக்க முடியும்.

அதேபோன்று Lease க்கும் பலவிதமான சிறப்பு விலைத் தள்ளுபடிகள் மூலம் உங்களால் வாகனங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். இவைகளில் உள்ள தீமைகள் என்று எடுக்கும் போது, சில வேளைகளில் உங்களால் விரும்பிய நிறங்களை தெரிவு செய்ய முடியாமல் போகலாம். அத்துடன் 3 நான்கு வருடங்களில் அதை விற்க நினைத்தால் 2001ஆம் ஆண்டு வாகனத்தைவிட சிறிது குறைவாகவே விற்கமுடியும். இவைகளைத் தவிர 2000 ஆண்டு வாகனத்தை தெரிவு செய்து வாங்குவதால் கூடுதலானவரை லாபமேயாகும்.

அதே வேளை 2001ஆம் ஆண்டு வாகனத்தை தெரிவு செய்வோமாயின், விரும்பிய நிறங்களை தெரிவு செய்யக் கூடியதாக இருந்தாலும் கூடுதல் பணத்தை விரையம் செய்யப்போகின்றோம்.

*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


## NTE AUTO INC.
**New Trade Engineering**

## என். ரீ. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough



## YARLCAN
**STEAM CLEANING**



உங்கள் சகலவிதமான
**Cleaning**
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

**Tel: 724-9085**
**Pager : 600 -0335**
**Cell: 721-9709**

# ஆரோக்கிய வாழ்வு (61)



- *N.* செல்வசோதி

## வாழ்வில் முழுமையை அடையத் தியானம்

தியானம் வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம். அது மனிதன் தன்னை அறிந்து கொள்ள உதவுகிறது. அதை ஒருவன் எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறானோ அதற்கு ஏற்றபடி அது அவனுக்கு என்றும உதவியாக இருக்கிறது.

நமது வாழ்க்கையை நடத்தும்போது திடீரெனத் தோன்றும் உணர்ச்சிகள் திடீரெனத் தோன்றும் உணர்ச்சிகள் தீர்மானங்கள் என்பனவற்றின் போக்கைத தியானம் சரிப்படுத்தும் தியானம் ஒழுங்காகப் பயிலப்பட்டால் மனத்தில மிகப்பெரிய சக்திகள் உருவாகின்றன. இதற்குத் தியான நிலையை ஒருவன் படிப்படியாகச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த குறிக்கோள்களைக் கடைப்பிடித்து தியானம் பழக வேண்டும். தியானத்தில் ஒருவன் முன்னேறும் அளவிற்குத் தனது வாழ்க்கையின் முழுமையை நோக்கி உயருகிறான். இது உயரமான ஒரு மலையின் உச்சியை அடைய வேண்டுமானால் எவராயினும் எந்த நேரமும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதைத்தான தியானப் பயிற்சியிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

தியானப் பயிற்சி தொடங்குவதற்கு முன் மனிதன் தனக்குள்ளே சில வகையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.
சுய கட்டுப்பாடுகள்

| | |
|---|---|
| 1. மன ஒழுக்கம் | 2. உடல் ஒழுக்கம் |
| 3. உடல் பயிற்சி | 4. மூச்சுப் பயிற்சி |
| 5. புலன் அடக்கம் | 6. மன ஒருமைப்பாடு |



மேற்குறிப்பிட்ட ஆறு வழிகள்தான் தியானத்தை அனுகூலமாக்குகின்றது.

மன ஒழுக்கத்தைப் பொறுத்தவரை பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். உண்மை பேசுவதுடன எந்த விதமான மன எழுச்சிக்கும் ஆளாகாமல் மனத்தை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உடலை என்றும் எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்வதுடன் உண்ணும் உணவிலும் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதுடன மாமிச உணவுகளையும் கொழுப்புச் சத்து அதிகமான தின்பண்டங்களையும தவிர்த்து வரவேண்டும். வயிற்றில் வாயுக்கள், மலச்சிக்கல் உருவாகாது பார்க்கவும். அப்போதுதான் மனத்தை உடல் தொல்லைகளிலிருந்து விடுபடச செய்ய முடியும்.

ஒரே இருக்கையில் காலில் வலி எடுக்காது ஒரு சில நிமிடங்களோ அல்லது ஒன்று இரண்டு மணி நேரங்களோ தொடர்ச்சியாக அமரப் பழகிக் கொள்வது முக்கியமானது. இதற்காகத்தான் தியானம் (Meditation) பழக விரும்புபவர்கள ஆசனப்பயிற்சி செய்யப் பழகிக் கொள்வது அவசியமென்று பதஞ்சலி முனிவரே கூறிப்போயுள்ளார். எனவே பத்மாசனம் வஜ்ராசனம், சித்தாசனம் போன்றவற்றுள் ஒன்றையாவது பழகிவரவேண்டும். இவைகள்தான தியானத்திற்குப் பொருத்தமான ஆசனங்களாகும். இந்த ஆசனமுறைகளில்தான் முள்ளந்தண்டானது வளையாது நன்கு நேராக இருக்கும். அடுத்து தியானப் பயிற்சியினால் ஏற்படும் அற்புதமான சக்திகளை அடைவதற்கு பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி முறை பேருதவியாக இருக்கின்றது. சுவாச உறுப்புகளை ஒழுங்குபடுத்தவும் உள் உறுப்புகளைச சுத்தம் செய்வதற்கும் இப்பிராணாயாம் முறைகள்தான் உதவி செய்கிறது.

அடுத்து மன அமைதி, மன ஒருமைப்பாடு என்பன முக்கியமானதாகின்றது. எத்தனை கோடி செல்வங்கள் இருந்தாலும் இதற்குமேல் இன்னமும் வேண்டும என்ற மனநிலை இருந்தால் அது மனத்தை ஒருபோதும் அமைதி கொள்ளவிடாது. இறுதியில் தீமையில்தான் வந்து முடியும். எனவே என்றும் எந்த நிலையிலும் மன நிறைவுடன் இருக்க முயற்சிக்கவும். அப்போதுதான் மன ஒருமைப்பாடு உருவாகும்.

### தியானத்திற்கு ஏற்ற இடமும் காலமும்

பூமியிலுள்ள அனைத்தையும் இடமும் காலமும் கட்டுப்படுத்துகிறது. தூய காற்றுள்ள இயற்கையோடிணைந்த அமைதியான இடம் வேண்டும். தனிமை முக்கியம். புனித இடங்கள் நல்ல மனிதர்களின் தொடர்புள்ள இடங்கள் மிகச சிறந்தது. இடையில் எந்தவிதமான தொந்தரவும் வராத இடமாகத் தோந்தெடுப்பதும் விரும்பத்தக்கது.

அடுத்து தியானத்திற்குரிய காலத்தைப் பொறுத்தவரை காலையில் சூரிய உதயத்திற்கு முன்புள்ள இரண்டு மணிநேரமும், மாலையில் அஸ்தமனத்திற்குப் பின்புள்ள இரண்டு மணிநேமும் உகந்ததாகக் கூறப்படுகிறது.

*-நன்றி (Meditation & Manthras)*

***வைட்டமின் ஏ புற்றுநோய் தடுக்கிறது*** - மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே தடுக்கலாம் என்கிறார்கள் அமெரிக்க டாக்டர்கள். வைட்டமின் ஏ சத்து உள்ள பொருட்களை சாப்பிட்டால் புற்றுநோயைக் குணமாக்கமாக்கலாம் அல்லது தடுக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உடலில் வளரும் கட்டிகளை வைட்டமின் ஏ தடுக்கிறது என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். எனவே இப்போது வைட்டமின் ஏ சத்து உள்ள மருந்துகளை புற்று நோய் சிகிச்சையில் பயன்படுத்துகிறார்கள்.

* குளிக்கும் நீரில் சிறிதளவு எலுமிச்சை பழச் சாறு கலந்து குளியுங்கள். உடலில் கெட்ட வாடை வீசாது.


Neelam SILK
நீலம் சில்க்

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



புதிய வெளியீடுகள்
மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"
'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)
CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484





# IMMA TRADING COMPANY

**MANUFACTURE - IMPORTS - EXPORTS - WHOLESALE**

**CLEARENCE SALE**

***Every Friday, Saturday and Sunday***
***10am - 09pm.***

IMPORTED READY MADE GARDMENTS CHILDRENS, LADIES AND GENTS WEAR

**cash & carry**

* **Stainless Steels Cookware**
* **Bed Spread**
* **Mint Blanket**
* **Quality Clock and Gift Items and More...**





**Tel: (416 609-0827**
**Fax: (416) 283-3218**
**Cell: (416) 930-0910**

**[illegible]85 Middlefield Rd., #21, Scarborough, Ontario M1V 4Y5**

# infoTamils Online

**தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்திற்கேற்ப உங்கள் வர்த்தக நிறுவனங்கள் பற்றிய விபரங்களை internet ல் இலவசமாக விளம்பரம் செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.**

## www.infotamils.com

If you are a business-owner wishing to attract that special Tamil market, take the opportunity NOW to advertise with infoTamils Online. Need help moving your company into the exciting and profitable world of Internet marketing?

**For movies show times visit infoTamils Online**

Contact infoTamils Online Today!
http://www.infotamils.com
Toll free: 1 888-257-2891
e-mail : info@infotamils.com


# விளையாட்டுத் தகவல்கள் (57)

-எஸ். கணேஷ்



## SINGER TRIANGULAR SERIES
## கிரிக்கெட்


இலங்கையில் July 5ஆம் திகதி தொடங்கி Singer ற்றுக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை, South Africa, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இம்முறை கலந்து கொள்கின்றன. கடந்த சில கிழமைகளின் முன்னர் இரண்டு Test சுற்று போட்டிகளில் பாகிஸ்தான் அணியிடம் பரிதாபகரமாக தோல்வி கண்ட இலங்கை அணி வட்டியும் முதலுமாக சேர்த்து Singer போட்டிகளில் முதல் சுற்றில் பாகிஸ்தானை இரண்டு ஆட்டத்திலும் படு தோல்வி அடையச் செய்துள்ளது. அது மட்டுமல்லாமல் முதல் சுற்றில் அடுத்து இரு ஆட்டங்களிலும் South Africa வையும் படுதோல்வி அடையச் செய்துள்ளது. இலங்கை அணியின் புகழ்பெற்ற விக்கெட் கீப்பர் ஆன கலுவுத்திரன கடந்த சில போட்டிகளில் சிறப்பாக ஆடாத காரணத்தால் அணியில் இருந்து நீக்கப்பட்டு குமார் சங்கஹாரா என்ற 23 வயதான இளம் வீரர் சேர்க்கப்பட்டுள்ளர். இவர் எடுத்த எடுப்பிலேயே இரண்டாவது ஆட்டத்தில் சிறப்பாக ஆடி ஆட்ட நாயகன் (Man of match) விருது பெற்று இலங்கை அணிக்கு மேலும் பலம் சேர்த்துள்ளார். அடுத்து அரவிந்த டி சில்வா மீண்டும் அணியில் இருந்து நீக்கப்பட்டு அவிசா குணவர்த்தனா (23) என்னும் திறமையான இளம் துடுப்பாட்ட வீரர் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த இரண்டு வருடமாக அணியில் இருந்து நீக்கப்பட்டு இருந்த தர்மசேனா பந்துவீச்சாளர் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.



புதிய இளம் விக்கெட்கீப்பரும் திறமையான துடுப்பாட்ட வீரர்
குமார் சங்கஹாரா

1. July 5 - பாகிஸ்தான் 45 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து, 164 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் Inzaman 83 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். இதில் Zoysa 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஸ்ரீலங்கா 37.3 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை வீழ்த்தி 166 ஓட்டங்களை எடுத்தது. அத்தப்பத்து 62 ஓட்டங்களை எடுத்தார். இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 5 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக D. Zoya தெரிவு செய்யப்பட்டார்.

2. July 6, 2000 - இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களை எடுத்தது. இதில் சங்கஹாரா 85 ஓட்டங்களை எடுத்தார். சவுத் ஆபிரிக்கா 48.2 ஓவர்களில் முழுவிக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களை எடுத்து. இதில் Chandana 10 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலங்கை அணி South Africa அணியை 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக குமார் சங்கஹாரா தெரிவு செய்யப்பட்டார்.



புதிய Opening Batsman
அவிசாகா குணவர்த்தன

### அநுபவ அருள் மொழிகள்

- இல்லையென்பதையும் இன்முகம் காட்டிஉரை
- ஈன்ற தாயும், நாடும் போற்ற நட
- இயன்றதை உரை உரைத்ததை உறுதியாக்கு
- இறைக்கின்ற விதையெல்லாம் முளைவிடாது
- ஈவோர் எவரோ? அவரே மேலோர்
- ஈவோர் இடத்தும் சூதுசெய்யாதே
- ஈடினை அற்றது ஈன்றாள் அன்பே
- உண்மைக்காக உயிரை இழந்திடவும் துணிந்திடு.
- உயர்ந்தோர் எவரென செயலே காட்டும்
- உலகம் புகழ உன்னதங்கள் செய்
- உன்னிலும் மேலாய்ப் பிறரைமதி
- உன்னை முடிக்க முயன்றால் முள்ளாய் மாறு






3. July 9 - பாகிஸ்தான் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது. Younis Khan 59 ஓட்டங்களை எடுத்தார். இதில் ஜெயசூரியா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இலங்கை அணி 49.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களை பெற்றது. இதில் ஜெயசூரிய 54 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணி பாகிஸ்தான் அணியை மீண்டும் 6 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது. ஆட்ட நாயகனாக ஜெயசூரியா தெரிவு செய்யப்பட்டார்.

4. July 11 - சவுத் ஆபிரிக்கா 49.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை பெற்றனர். இதில் JH Kallis 83 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். இதில் இலங்கை அணி சார்பில் Dharmasena, Chandana தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். இலங்கை அணி 27.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்தனர். இதில் குணவர்த்தன 87 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணி South Africa அணியை மீண்டும் 8 விக்கெட்டுகளால் வெற்றி கண்டது. ஆட்டநாயகனாக அவிசாகா குணவர்த்தன தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை அணி எந்த வித தோல்வியையும் சந்திக்காது இறுதியாட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. (Unbeaten Team)

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*–தொகுப்பு - பரம்*

1979ஆம் ஆண்டு வெளிவந்த சினிமாக்களின் தொடர்ச்சி இந்த இதழிலும் தொடர்கிறது. 1931ஆம் ஆண்டில் வெளிவரத் தொடங்கிய சினிமாக்களின் எண்ணிக்கையும் ஆண்டொன்றுக்கு அதிகரித்து வந்தது. 1931ஆம் ஆண்டு ஒரே ஒரு தமிழ் படம வெளிவந்தது. இந்த ஆண்டு (1979) முன்னைய ஆண்டுகளை விட அதிக படங்களாக 99 படங்கள் வெளிவந்தன. இதே நிலைமை பிநதிய ஆண்டுகளிலும் தொடர்ந்தது.

படங்கள் அதிகரிப்பதற்கு புதிய நடிகர்கள், புதிய இயக்குனர்களின் ஆதிக்கம தொடங்கியதும் ஒரு காரணமாக இருக்கலாம். P.U. சின்னப்பா, M.K. தியாகராஜபாகவதர் காலங்களில் இரு நடிகர்கள் என்ற நிலைமை தொடங்கி, MGR, சிவாஜி எனத் தொடர்ந்தது. இந்தக் காலங்களில் மற்றும் பல நடிகர்கள் தோன்றினார்கள். உதாரணமாக ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், S.S. ராஜேந்திரன், ஜெமினி கணேசன், முத்துராமன், சிவகுமார்... எனப் பட்டியல் தொடர்ந்த போதும், 1975இற்குப் பிற்பாடு புதிய இ[illegible]னர்களினாலும் புதிய நடிகர்களாலும் சினிமாவில் புதிய பரிமாணம் தோன்றுவதைக் கா[illegible]கூடியதாக இருந்தது. இதன் முதற்கட்டமாக வருடா வருடம் வெளிவரும படங்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதை காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக, 1979ஆம் ஆண்டை ஆராயும் போது சிவாஜி கணேசன், ரஜினிகாந்த, கமலஹாசன், பாலசந்தர், பாரதிராஜா, விஜய்காந்த, சிவகுமார் பாலுமகேந்திரா, மகேந்திரன்... பட்டியல நீளுகின்றது. இவர்களின் வருகைகளும் சினிமாவின் மாற்றத்திற்கு காரணமாக அமைந்தது. 1979ஆம் ஆண்டு வெளிவந்த படங்களில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய படங்கள் பாலுமகேந்திராவின் கதை வசனம், டைரக்ஷன், ஷோபா, பிரதாப் நடித்த அழியாத கோலங்கள், பாலுமகேந்திராவிற்கு திருப்பம். இரசிகர்கள் பாராட்டிய வெற்றிப படம்.

கல்யாணராமன், கமலஹாசனின் நடிப்பில், பஞ்சு அருணாசலத்தின் கதை வசனத்தில் வந்த படம். கமலஹாசன் இருவேடங்களில் நடித்த படம்.

பசி: விஜயன், ஷோபா... நடித்த படம், கதைவசனம், டைரக்ஷன் துரை. இந்தப்படத்தில் டெல்லி கணேஷ், சோபா மிகத் திறமாக நடித்திருந்தார்கள் "ஆர்ட் படம்" எனத் தயாரிக்கப்பட்டு இருந்தாலும் அனைத்து ரசிகர்களினதும் பாராட்டுப் பெற்ற படம். 1979ஆம் ஆண்டிற்கான தேசியவிருதை (வெள்ளிப் பதக்கம்) பெற்றபடம் பசி. சிறந்த நடிகையாக சோபனாவும், மாநிலத்தின் சிறந்த படமாகவும், சிறந்த டைரக்டராக துரையும தெரிவு செய்யப்பட்டார்.

### ஜெய்சங்கர்



ஜெய்சங்கர்

இவன் கண்கள் சிறியது. ஆனால் பார்வை மிகப்பெரியது. இவை ஜெய்சங்கரைப்பற்றி கவிஞர் வாலி ஒருமுறை எழுதிய ஆரம்ப வரிகள். அதற்கேற்ப கருணைப்பார்வையுடன பெருந்தன்மையுடன் கடைசிவரை வாழ்ந்து மு[illegible]இருக்கின்றார் இக் கலைஞர்.

இரவும் பகலும் படத்தில் தன்னை அறிமுகப்படுத்திய இயக்குனர் ஜோசப், தனிய ஜெய்யிடம், "நீ எனக்கு ஏதாவது நன்றிக்கடன் செய்யவேண்டும் என்று எண்ணினால் அதை சென்னையிலுள்ள கருணை இல்லத்திற்கு உதவுவதன் மூலம் செய்துவிடு" என்று சொல்லிவிட, கருணை இல்லத்திற்கு உதவ ஆரம்பித்தார் ஜெய். அதன்பின் அநாதை இல்லங்களுக்கு உதவுவதையே அவருடைய போதையான பழக்கமானது. ஏதாவது கலை நிகழ்ச்சிக்கு அழைத்தால் அதில் ஒரு பங்கை அநாதை இல்லத்திற்குத தரச் சொல்லிவிடுவார். போலித்தனம் மிக்க சினிமா உலகில் அந்தக் காலத்திலேயே இயல்பாகப் பழகும் பழக்கம் உள்ளவர். அதனால் எல்லோரும் அவருக்கு நண்பர்கள். அந்த நட்பு அவர் கூடவே வந்தது.

திரைஉலகில் அவருக்கு தொய்வு ஏற்பட்ட பொழுது எல்லாம் அவரைத் துக்கிவிட பலர் தயாராக இருந்தார்கள். அதனால் அவர் நடித்த 400 படங்களில் 200 க்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகனாக நடித்திருந்தார். MGR, சிவாஜி இவர்களின் படங்களின எண்ணிக்கைக்கு மேலான எண்ணிக்கைகளை இவர் ஒவ்வொரு வருடமும் கொடுத்து வந்திருந்தார். அந்த விதத்தில் தமிழ் நாட்டில் உள்ள 2000 திரையரங்குகளுக்கு தொழில் தந்தவர் இவர் என்கின்றது ஒரு புள்ளி விபரம்.

வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமை இவரது படம் வெளியாகும். இதனால் இவர் வெள்ளிக்கிழமை ஹீரோ எனவும் அழைக்கப்பட்டு வந்தார். அதன் பின்னணியில் பார்த்தால் இவர் எந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தந்தார் இது சாத்தியப்படும் என்பது புரியும். படப்பிடிப்புக்கு எப்படி ஒத்துழைக்க வேண்டும் என்பதை ஹீரோக்கள் இவரிடம இ[illegible] கற்றுக்கொள்ள வேண்டும்.

ஜெய் மரணம் அடைந்த அன்று ராஜ் TV செய்தியில் அச்செய்தியை சொல்லிவிட்டு ஒரு பழைய படத்தில் இருந்து துண்டுக் காட்சி போட்டார்கள். அதில் நாகேஷ் ஜெய்யிடம் சொல்கின்றார். "உனக்கும் கூட இப்படிப்பல பேர் எதிரிகளாக இருப்பாங்கள்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கலப்பா " என்கின்றார். அதற்கு ஜெய் சொல்கின்றார் "எனக்கு இத்தனை எதிரிகள் இருப்பாங்கன்னும் தெரியாது. அவங்கெல்லாம் இப்படி ஒரே நேரத்துல ஒண்ணு சேர்வாங்கண்ணும் எனக்குத் தெரியாது"

ஜெய்கு ஒரே எதிரிதான். அந்த எரிதிரியின் பெயர் மரணம் .ஒரு வேளை அது கூட அவரிடம் நட்புக் கொள்ளத்தான் அவரை அழைத்துக்கொண்டதோ என்னவோ?

திடீரென நெஞ்சு வலிக்கிறதே என்று துடிக்க அதைப்பார்த்த அவர் மனை மூர்ச்சையாகி விட்டார். உடனடியாக ஜெய்யை அப்பல்லோ மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று விட்டனர். மனைக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில தொடர்ந்து 3 தடவை மாரடைப்பு வந்து கடைசியில் இயற்கை அடைந்து விட்டார் ஜெய். வீட்டில் உள்ள மனைவி படுத்த படுக்கையில். இந்நிலையில் ஜெய்யின் உடலை அங்கு எடுத்துச் செல்வது மனைவியின் உடல் நலத்துக்கு நல்லது அல்ல என்பதால அடையாறில் உள்ள இன்னொரு வீட்டிற்கு எடுத்துச் சென்று விட்டார்கள். இறுதிச சடங்குகள் நடந்து முடியும் வரை கணவன் மரணித்தது மனைவிக்குத் தெரியாது. எத்தனை நாளைக்குத்தான் மறைத்து வைக்க முடியும். இப்படியொரு சோகத்தை ஆண்டவன் ஏன்தான் மறைத்தானோ?

-நன்றி "தேவி"


**EZ DRIVING SCHOOL**



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்

*JEYAKUMAR* © (416) 283-4100

Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

**KD FINANCIAL SERVICES**

Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent

**VISA CARDS UPTO $5000**

புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில் கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும் வேலை செய்யும் கடிதம் (Employment Letter) உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்

Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net

தொடர்புகளுக்கு: *weekdays - 5:30pm - 10:00 pm.*

Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm

**Safety Truck**
**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**


Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

Tel: (905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 13

### கணணியின் உயிர் நாடி (1)

[ Computer's Operating System]

ஒரு கொம்பியூட்டரில் உயிரும் உடலும் போல உடல் என்பது அதனுடைய உதிரிப்பாகங்கள் என்று சொல்லுகிறோம். இதை ஏற்கனவே ஒருமுறை சொல்லி இருக்கிறேன். கண்ணால் பார்க்கக் கூடிய அத்தனை பொருட்களும் உடல்போல அதாவது Hardware என்று சொல்லப்படும் அந்தப் பாகங்கள், CPU, Memory, Harddrive இது போன்றவைகள். இவைகள் எல்லாம் நாம் பார்க்கக் கூடிய பாகங்கள் உடல் என்று சொன்னால் இயக்கும் உயிர் அதாவது உயிரை கண்ணால் பார்க்கமுடியாது. அதேபோலத்தான் Operating System இவ்வளவு உதிரிப்பாகங்களையும் ஒன்றாக இணைத்து இயக்கக் கூடிய ஒரு சக்திதான் Operating System. இந்த Operating System இல்லாவிட்டால் Computer ஒரு உயிரற்ற உடலாக இருக்கும். உடல் எவ்வளவு முக்கியமோ அதேபோலத்தான் உயிரும் முக்கியம் அல்லவா. அதே போலத்தான் Hardware எவ்வளவு முக்கியமோ Softewareம் முக்கியம். Software இலும் Operating System தான் மிக முக்கியமான பிரதானமான ஒன்றாகும். அதை இப்படியும் சொல்லலாம். மனிதனின் வெளிக்தோற்றமும் அவனின் குணமும் போல ஒரு மனிதன் பார்ப்பதற்கு அழகாக இருப்பான். அவன் குணம் நன்றாக இருக்காது. சிலர் பார்ப்பதற்கு அழகாக இருக்கமாட்டார்கள் அவர்கள் குணம் மிக நன்றாக இருக்கும். ஒரு தியாக மனப்பான்மை, ஒரு விட்டுக் கொடுக்கும் தன்மை, மற்றவர்களை ஒன்றுபடுத்தி வாழக்கூடிய நல்ல குணமுடையவனாக இருப்பான் ஒரு மனிதன். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் அவனுடைய Hardware எப்படி இருக்கிறது என்பது முக்கியமில்லை. அவனுடைய Software இயங்கக்கூடிய இயக்கம் எண்ணங்கள் அறிவு நன்றாக இருக்கின்றது என்பது அர்த்தம். இதைப்போல கணணியில் அதனுடைய பாகங்களை விட அதனுடைய இயக்கம் மிக முக்கியம். எந்த Operating System த்தை பயன்படுத்துகின்றீர்கள் என்பதை பொறுத்துத்தான் உங்களுடைய கணணியின் வேகம், தன்மை, சிறந்த செயல்பாடுகள் எல்லாம் அமையும். ஆகவே Operating System எவ்வளவு முக்கியம் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். உதாரணமாக ஒரு வயது வந்த வாலிபன் தனக்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடும் போது அநேகமாக எல்லோரும் அந்த உடலையும், உடல் அழகையும் அல்லது முக அழகையும் மட்டும் தான் பார்க்கிறோம். ஆனால் அதற்கும் ஒரு படி உள்ளே சென்று அந்தக் குணத்தைப் பார்க்க வேண்டும். இந்தக் குணமுடைய இந்தப் பெண் வாழ்க்கையின் இறுதிவரை நமது குணத்துடன் ஒத்து வருவாளா என்பதை அவதானிக்க வேண்டும். அதே போலத்தான் உங்களுடைய தொழிலுக்கு அல்லது உங்களுடை செயல்பாட்டிற்கு இந்தக் கணணியின் Operating System உங்களுக்கு ஒத்து வரக்கூடியதா அல்லது உங்களுக்கு உதவி செய்யக்கூடியதா என்று பார்ப்பது மிகப் பொருத்தமானது. சில தொழில்களுக்கு Apple அதாவது Macintosh Computer களின் Operating System மிகப் பொருத்தமானதாக இருக்கும். உதாரணமாக Printing Press, பெரிய பெரிய சினிமாக்களுக்கு தேவையான Animation போன்ற பல விடயங்களுக்கு Macintosh Operating System கள் பயனுள்ளதாக இருக்கும். சிலவீட்டு உபயோகங்களுக்கு அல்லது சாதாரண உபயோகங்களுக்கு Windows போதுமானதாக இருக்கும். சில அலுவலகங்களுக்கு Windows NT, Windows 2000 போன்ற Operating System கள் பயனுள்ளதாக இருக்கும்.



எனவே உங்களுடைய கணணியில் எந்த Operating System இருக்கின்றது அல்லது இருக்க வேண்டும் என்று நீங்கள் உணர்ந்து கொள்வது மிக முக்கியம். ஏதோ ஒரு கணணியை வாங்கினோம் அதில் படம் (Movie) பார்க்கிறோம் என்று இருக்கக்கூடாது. அதற்காக T.V, VCR அல்லது எந்தவொரு படம் பார்க்கும் எந்தக் கருவியும் போதுமானது. கணணி அப்படி அல்ல. கணணி எந்த Operating System த்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிது என்பதை நீங்கள் உணர்ந்து செயல்படுவதுதான் உண்மையான கணணியின உபயோகம் என்று சொல்லவேண்டும்.

கணணியில் பல விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்று Software ஆகும். இந்த Software அந்தக்காலம் முதல் இன்று வரை வளர்ந்து கொண்டு வருவது உங்களுக்குத் தெரியும். 20 ஆண்டுகளாக DOS என்ற Disk Operating System தனிமனிதன் உபயோகித்துக் கொண்டிருக்கும் PC அதாவது Personal Computer என்று சொல்லப்படும் கணணியில் உருவானது. அதன்பின்பு தற்பொழுது நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் Windows வந்தது. Dos, Windows என்பன ஏறக்குறைய எல்லோராலும் பயன்படுத்தப்படும் Operating System கள் ஆகும். தற்பொழுது இதற்கு போட்டியாக அல்லது மாறுபாடாக Lynux என்று சொல்லக் கூடிய Operating System கள் வந்துள்ளன.

இடையில் Macintosh (Apple) Operating System என்று சொல்லப்படும் தனி கணணி கூட நடைமுறையில் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கும் DOS, Windows களைப் பற்றி ஓரளவு உங்களுக்கு தெரியும் என நினைக்கிறேன். DOS என்று சொல்லப்படும் Operating System பழைய காலம் முதல் DOS 1,2,3,4, என்று வளர்ந்து DOS 6.22 வுடன் நிறுத்தப்பட்டு Windows 95 என்ற Operating System நடைமுறைக்கு வந்தது. இந்த Win 95 இன் உள்ளே DOS இனுடைய Commands எல்லாம் அடக்கப்பட்டு இருக்கிறது. அதனால் Win 95 எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய ஒரு சிறந்த Operating System ஆக வளர்ந்து வந்தது. இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படலாம். Windows 3.11 என்பதும் அதனுடைய பயன்பாடு என்ன என்பதை பற்றி பலர் நினைக்கலாம். Win 3.11 ஒரு தனி Operating System இல்லை. அது DOS Operating Systemதின் மேலெழுந்தவாரியாக அதன் மேலே பயன்படக்கூடிய ஒரு Graffic Program. அதாவது DOS Operating System இல் எழுத்துக்களை மட்டும் தான் பார்க்க முடியும். எந்தவிதமான படத்தையோ, Mouseஐ பாவிக்கக்கூடிய மாதிரி எந்த ஒரு செயல்பாட்டையோ அல்லது Animation களை பார்க்க முடியாது. இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்வதற்காகத்தான் Windows 3.11 ஐ DOS உடன் சேர்த்து இயக்கக் கூடியதாக எழுதினார்கள். அதுதான் Windows 95க்கு முன்பாக ஒரு வளர்ச்சி யாகும். DOS Operating System உங்கள் கணணியில் இருந்தால்தான் அதன்மேல் Window 3.11 வேலை செய்யும். ஆனால் Windows 95 அப்படியல்ல. இது தன்னிச்சையா அதாவது வேறு ஒரு Operating System இல்லாமலும் வேலை செய்யக்கூடிய ஒரு Grafic Program. இந்த Windows 95 1995. 1996ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. இதனுடைய வருகை பலருக்கு கணணியை பாவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஊட்டியது என்று சொல்லலாம். அதாவது நமது சாதாரண வாழ்க்கைச் செயல்பாடுகள் போல தேவை இல்லாதவைகளை குப்பைத் தொட்டியில் (Recycle Bin) போடுவதும் தேவை ஏற்படின் அதை எடுப்பது போலவும், பொருட்களை ஒழுங்காக Self இல் அடுக்கி வைப்பது போன்ற பல நடைமுறையில் உள்ள செயல்பாடுகளை இந்த Windows 95 Operating இல் பயன்படுத்தக் கூடியவாறு எழுதியது பல சாதாரண மக்களின் மனதில் இடம் பிடித்து பலரின் ஆர்வத்தை Win 95 தன் பக்கம் ஈர்த்துள்ளது. அதாவது User Friend பயன்பாட்டாளர்களின் நண்பன் என்று சொல்லலாம். நட்புத்தனமாக இந்த Operating System அமைந்தது தான் கணணி உலகத்திற்கு கிடைத்த ஒரு பேறு என்று சொல்லலாம்.

*(தொடரும்)*

*இதில் வரும் ஒருசில சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறையைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி* ***'உலக தமிழோசை'*** *க்கு நீங்கள் அறியத்தரவும்.* vlambaram @email. com


Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235
COMPUSERVICE International
COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
(905) 432-2422 *FAX: (416) 431-5828
Email: compuservice@compuserviceint.net
web: www.compuserviceint.net

* நவரத்தினங்களில் மிகவும் கடினமானது எது? வைரம்
* ஓசோன் பாதுகாப்பு மண்டலத்தை சிதைப்பது எது? குளோரோ புளூரோ காபன் வாயுக்கள்
* தாய்லாந்து நாட்டின் தலைநகரம் ? பாங்காக்
* இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மசூதி எங்குள்ளது? ஜும்மா மசூதி, புதுடெல்லி
* மீன்களிலே ராஜமீன் என்று அழைக்கப்படுவது ? சுறாமீன்
* 2002ஆம் ஆண்டு கொமன்வெல்த் நாடுகளின் விளையாட்டு எங்கு நடைபெற இருக்கிறது? மன்செஸ்டர்
* உலகில் வாழும் மிகச் சிறிய பறவை? ரீங்காரப் பறவை
* இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களில் அடங்கி இருப்பது? ஹீமோகுளோபின்
* மிகப்பழமையான வேதம் எது? ரிக் வேதம்
* உலகிலேயே மிக உயரமான மலைத் தொடர் எது? இமய மலைத் தொடர்
* ஆங்கில ஆக்ஸ் போர்ட் அகராதியை முதன் முதலில் தொகுத்தவர் யார்? ஜேம்ஸ் முர்ரே
* நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் யார்? ரவீந்திரநாத் தாகூர்
* சீக்கியர்களின் புனித நூல் எது? தொகுத்தவர் யார்? கிரந்த சாகிப், 5வது குரு அர்ஜுன்சிங்
* உலகப் புகழ்பெற்ற வெந்நீர் ஊற்று எங்குள்ளது? அமெரிக்கா.


பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில்
வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(416) 439-3709
Pager: 375-7330


சூரியக்குடும்பம்36 **விண்வெளி** *தருபவர்- கனி*

இன்று சூரியனின் ஆறாவது கிரகமாகிய சனிக் கிரகம் பற்றிப் பார்ப்போம். மனித இனத்தை மிகவும் பயப்படுத்திய, பயப்படுத்துகிற கிரகம் சனிக்கிரகமாகும். சனியைப் பற்றிக் கேள்விப்படாத நம்மவர்களே இல்லை. ஏழரைச் சனி, அட்டமத்துச் சனி என்ற பதங்கள் எல்லோராலும் உச்சரிக்கப்படும் சாதாரண பதங்கள் என்றே கூறவேண்டும். இந்தச் சனியால் அல்லல்படாத இதிகாச, புராண நாயகர்களே இல்லை. எனலாம். ஒரு தனிமனிதனின் வாழ்க்கையில் இந்தச் சனியின் ஆதிக்கம் மிக அதிகம் என்பர். இதன் வல்லமை கருதியோ என்னவோ கடவுளின் அந்தஸ்திற்கு சனியை உயர்த்திச் சனிஸ்வரன் எனவும் அழைப்பர். என்ன! தடம்புரண்டு எனது எழுத்துக்கள் வேறு பாதையில் செல்கின்றது என எண்ணுகின்றீர்களா இல்லை! இன்று எனது பார்வை விஞ்ஞான ரீதியிலேயே அமையும்.



சூரியனின் இரண்டாவது பெரியகிரகம் சனியாகும். நமது பூமியைப் போல் சுமார் 95 மடங்கு பாரமான சனி, விட்டத்தில் பூமியைப் போல் 9½ மடங்கானதாகும். வியாழனை விடச் சிறியதான சனி மிகவும் குளிர்ந்த கிரகமாகும். சூரியனில் இருந்து பூமியைப் போல் 9.5 மடங்கு தூரத்தில் காணப்படும் சனி சூரியனை வலம் வர எமது பூமியின் கணக்குப்படி 29.46 வருடங்கள் - 10,760 நாட்கள் எடுக்கும். சூரியனை வலம் வரும் வேகம் 9.6 Km/sec. ஆகும். அதாவது ஒரு நிமிடத்தில் சுமாராக 600 கிலோ மீற்றர்களைக் கடந்து விடும். எமது சாதாரண வீதிகளில் வாகனங்களில் கட்டுப்படுத்தப்பட்ட கதி நிமிடத்திற்கு ஒரு கிலோ மீற்றர் என்பது யாவரும் அறிந்ததே. இந்த அபரிமிதமான வேகம் திரவ அமைப்பில் காணப்படும் இந்த வாயு உலகத்தின் அமைப்பை சிற்சில வேளைகளை அதன் மத்திய பகுதியில் மாற்றம் செய்கிறது என்கிறார்கள். இந்தக் குளிர்க் கிரகத்தின் வெப்பநிலை -180$^{0}$ C ஆகும். நமது பூமியின் வெப்பநிலை -50$^{0}$Cயில் இருந்து +50$^{0}$C வரையிலானது என்பது நாம் அறிந்ததே. சனி த[illegible]னத்தானே சுற்றி வருவதற்கு சுமார் 10 மணித்தியாலங்கள் எடுககும்.

சனியின் சிறப்புகளில் ஒன்று அதன் வளையங்கள் ஆகும். இந்த வளையங்கள் பல பில்லியன் எண்ணிக்கையில் ஆன பனித்துகள்களினால் ஆனவை. உண்மையில் இந்த வளையங்கள் எல்லாம் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். பனித்துகள்களின் வேறுவேறான சுழற்சி வேகங்கள் சனியின் சந்திரன்களின் கவர்ச்சி, சனிக்கிரகத்தைச் சூழவுள்ள காந்தப்புல வலிமையினால் ஏற்றம் பெற்ற துகள்களின் வெளித்தள்ளுகையினால் இவ்வளையத்தின் இடையிடையே இடைவெளிகள் தோன்ற பல வளையங்கள் சனியினைச் சுற்றிக் காணப்படுகின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள். நமது பூமியில் இருந்து உயர்வலுக் கொண்ட தொலைக்காட்டிகளின் ஊடாக இந்த இடைவெளிகள் அடங்கிய வளையங்களைத் தெளிவாகப் பார்க்கலாம். இந்த வளையங்களின் தெளிவான பௌதீக அமைப்போ அல்லது வளையங்களின் தோற்றப்பாடோ இன்னமும் அறியப்படவில்லை. கிரகத்தின் தோற்றக் காலத்தில் இருந்தே இந்த வளையங்களும் தோன்றியிருக்கலாம் என்ற கருத்தே பெரும்பாலான விஞ்ஞானிகளிடையே உள்ளது.

சனிக் கிரகத்திற்கு குறைந்தது 17 சந்திரன்கள் ஆவது இருக்கவேண்டும் என்கிறார்கள். எல்லாமே பெருமளவு பனியைக் கொண்ட பாறைகள். இதன் பெரிய சந்திரன் ரைரன் (Titan) ஆகும். சூரியனின் முதலாவது பாறைஉலகமாகிய புதனை விடப் பெரியது. புதனைவிட 5.6 வீதம் பெரியதான இந்தச் சந்திரன் தன்னைச் சுற்றி ஒரு வளி மண்டலத்தைக் கொண்டிருக்கக் கூடியதான திணிவைக் கொண்டுள்ளது. பெருமளவு நைதரசனையும் மெதேனையும் கொண்ட இந்த வளி மண்டலத்தினுள் இ[illegible]கும் இந்தச் சந்திரனின் மேற்பரப்பில் திரவ மெதனேனும், திரவ மெதேனும் காணப்படலாம் எனக் கூறுகின்றார்கள்.

சனி, அதன் வளையங்கள், சனியின் சந்திரன் என்பன பனிக்கட்டிகளையும், பனியத்துகள்களையும் கொண்ட ஒரு குளிர் தொகுதியாகும். இதனையும் விட குளிரான சூரியனின் வாயு உலகங்கள் உண்டு. யூரேனஸ், நெப்ரியூன் எனும் அந்த ஜாவியன் உலகங்களைப் பற்றியும் புளுட்டோ பற்றியும் இனிவரும் காலங்களில் பார்ப்போம்.

* சூரியக் குடும்பத்திலேயே ஒளி மிகுந்த கோள் எது?
  வீனஸ்
* "இரவும், பகலும்" சரியாக உள்ள நாட்கள் எவை?
  மார்ச் 21, செப்டெம்பர் 23
* விண்வெளியில் ஓசோன் படலத்தைத் தீவிரமாக அழித்து வரும் வாயு எது? குளோரோ ஃபுளூரோ காபன்கள்
* புளூட்டோ (Pluto) கோள் கண்டுபிடித்த திகதி எது?
  பெப்ரவரி 1950


T. S. AUTO

SPECIALIST TOYOTA HONDA

MOTOR VEHICLE SPECIALISTS

FOR COMPLETE AUTO WORKS AND DETAILING




உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing

TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX




Call: Kumar

Tel: (416) 293-3395 (416) 891-2893

2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3

THE CHILDREN EDUCATION TRUST OF CANADA

( CET )

சீலன். A (சிவா)

TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836

email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு $400 இலவசம்



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே!

# ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்...

## உறவும் முறைகளும்



உலகில் உள்ள அனைத்து இன மக்கள் உறவு முறைகளை யாராலும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், முறைகள் ஒரு சொல்லில் அடங்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தமிழில் உதாரணமாக கணவன், மனைவி, அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, மாமா, மாமி, பாட்டா, பாட்டி, அத்தான், மச்சாள் என்று உறவு முறைகளைக் குறிக்கும் பல சொற்களை காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதராகப் பிறக்கும் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பெயரைக் கொண்டு இருந்த போதும் உறவினர்களுக்கிடையே ஒரு மரியாதை கலந்த உரிமையை இச்சொற்கள் கொடுக்கின்றன. ஐயா, அம்மா, அண்ணன் போன்ற சொற்களைப் பொதுவாக தமது வயதிற்கு மூத்தோர்களையும், பெரியவர்களையும் உறவினர்கள் இல்லாத விடத்திலும் மரியாதையாக அழைக்கப்படல் வேண்டும் என்ற காரணத்திற்காக பாவிப்பதுண்டு.

இந்த உறவு முறைகள் வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் மிக முக்கியமாக உறவினர்களுக்கிடையே நல்ல சுமூகமான உறவை வளர்க்கவும், வலுப்படுத்தவும் உதவியாக இருந்து வருகின்றது. நாம் உறவு முறைகளை பாவிக்கும் விதத்திலும், அதன் மூலம் கொடுக்கப்படும் மரியாதையையும் ஒருவர் பேச்சுக்கு மற்றவர் மதிப்பு கொடுப்பதும், மரியாதையின் நிமித்தம் அடங்கிப்போவதும் இலகுவாகின்றது. தர்க்கங்களையும் பிரச்சினைகளையும் தவிர்க்க வழி வகுக்கின்றது.

எமது முன்னோர்கள், குடும்பங்களில் இந்த உறவு முறைகளை சரியான முறையில் ஒவ்வொருவரும் பாவித்து அனுசரித்துப் போக வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்ததோடு, எல்லோரும் அதைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பதை கண்காணித்து ஒவ்வொருவருக்கிடையேயும் நல்ல உறவு வளர்வதற்கு காரணமாக இருந்தார்கள். அதன் காரணமாக காலம் காலமாக உறவினர்களுக்கிடையே நல்ல உறவு நிலவி வந்தது. அந்த நிலை மாறி பெயர் சொல்லி அழைக்கும் மேற்கத்தியபாணி முறை எமது கலாச்சாரத்துடன் கலந்தும் அதன் பயனாக சுமூகமான உறவு முறிய ஒரு காரணமாக அது அமைந்து விட்டது.

உதாரணத்திற்கு நண்பர்களில் வயதிற்கு மூத்தவர்களும் இருப்பார்கள், இளையவர்களும் இருப்பார்கள். உரிமையுடன் அவர்களைப் பெயர் சொல்லி அழைப்பதுண்டு. மிகவும் நெருங்கிய நண்பர்களை மச்சான் என்று அழைக்கும் முறையும் சாதாரணமாக வழக்கத்தில் உண்டு. ஆனால் எவ்வளவு நல்ல நண்பனாக இருந்த போதும் ஒரு பிரச்சினை என்று வரும்போது பொதுவாக நண்பர்களுக்கிடையே அந்தப் பிரச்சினை தீர்ந்து போவதைக் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுக்கிடையே, முறை சொல்லிக் கூப்பிடுபவர்களுக்கிடையே இருக்கும் உறவையும், பெயர் சொல்லிக் கூப்பிடும் அண்ணன் தம்பிகளுக்கிடையே, இருக்கும் உறவையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பொதுவாக பெயர் சொல்லிக் கூப்பிடும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிரச்சினைப்படுவதும், தர்க்கப்படுவதும் கூடுதலாக இருப்பதைக் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. முறை சொல்லி அண்ணன் தம்பி என்று அழைக்கும் போது மரியாதை காப்பாற்றப்படுவதால் பிரச்சினை தவிர்க்கப்படுகின்றது. பெயர் சொல்லி அழைக்கும் போது ஒரு வகை நண்பன் போன்ற மனப்பான்மை உருவாவதே பிரச்சினை வலுக்கக் காரணமாகின்றது என்பதே எனது கருத்தாகும்.

முன்பு ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி பெயர் சொல்லி அழைப்பதைக் காண முடியாது. எனது நண்பன் ஒருவர் சொன்னார் தமது குடும்பத்தில் முன்புதான் சிறிய பையனாக இருந்த காலத்தில் வீட்டு வேலைக்கு உதவியாக இருந்த வயது முதிர்ந்த மூதாட்டியொருவர், சந்தைக்கு சென்று காய், கறி வாங்கி வந்து உதவி செய்வாராம். அவர், நாம் வழமையாக அழைக்கும் முருங்கைக் காயை பிரம்புபோல நீண்ட பச்சைத் தடிக்காய் என்று தான் சொல்வாராம். என்ன காரணம் என்று அறிய முற்பட்ட போதுதான் அந்த அம்மையாரின் கணவனின் பெயர் முருகையன் என்றும் முருங்கை காய் தனது கணவனின் பெயரை ஒத்து இருப்பதால் அந்தப் பெயரைச் சொல்லி தனது கணவனின் மதிப்பை குறைப்பதாக அவர் கருதினாராம். அந்த நாளில் இருந்து தனக்கு அந்த அம்மையாரின் மீது இருந்த மதிப்பு இன்னும் பல மடங்கு அதிகரித்ததாகவும் சொன்னார். முன்பு குடும்பங்களில் கணவன், மனைவிக்கிடையே மனமுறிவு ஏற்படுவதற்கான காரணங்கள் குறைவாக இருந்ததற்கான முக்கிய காரணம் அழைக்கும் விதத்தில் கொடுக்கபட்ட மரியாதையாகும். மரியாதை காப்பற்றப்படும் போது பிரச்சனைகள் வில்க்கப்படுகின்றது.

முன்பு குடும்பத் தலைவனை மனைவி, தமது பிள்ளைகள் தந்தையை அழைக்கும் முறையாக ஐயா என்றோ அப்பா என்றோ அழைப்பார்கள். மரியாதை கொடுக்கப்படுகின்றது என்று உணர்ந்து கொள்ளும் இடங்களில் பிரச்சினை இலகுவில் சுமுகமாகின்றது. இன்று நவீன யுகத்தில் இந்திரன், சந்திரன், ஜீவா, பரம் என்று பெயர்களைக் கொண்டு கணவனை மனைவி அழைப்பது சாதாரணமாகிவிட்டது. நண்பன் மனப்பான்மை உருவாகி டேய் என்று விழித்து கோபத்தில் கணவனை வைது எரிகின்ற நெருப்பில் உற்றிய நெய்யாக பிரச்சினை வலுக்கவும் இந்த அழைக்கும் முறைகள் காரணமாகின்றது என்பதை மக்கள் என்று உணர்கின்றார்களோ அன்று தான் குடும்பப் பிரச்சினைகள் தீர வழிபிறக்கும் என்பது எனது நம்பிக்கை. கணவனை மனைவி அப்பா என்றும் மனைவியை கணவன் அம்மா என்றும் அழைப்பது அவர்களுக்கிடையே உள்ள அன்னியோன்னியத்தையும் ஒருவருக்கொருவர் கொடுக்கும் மதிப்பையும் காட்டுகின்றது. மதிப்பு இருக்கும் இடத்தில் பிரச்சினை விலகி விடுகின்றது. எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் சுமூகமான உறவு முறைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் ஆயி கண்டிப்பாக தமிழ் தாய் தந்தையர் அதை கடைப்பிடிக்க வேண்டு பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

*சிந்தனை தொடரும்....*

*பரம் G. ஒரு சாதாரண மனிதன்*


MARRIAGE BROKER



நல்ல ஜாதகங்கள் கையிருப்பில் இருக்கிறது. செவ்வாய் தோசமுள்ள ஜாதகங்களும் உண்டு. மேலதிக தொடர்புளுக்கு: :416 438-3281

Aruna Food

EAST WEST INDIAN AND CANADIAN GROCERI

* துரித பணமாற்றுச் சேவை

* VIDEO CONVERT SYSTEM

நாங்கள் எந்த மலிவு விலையையும் சமன் செய்வோ

அருணா பூட்

3585 Keele Street, Unit 11

North York, Ont. M3J 3H5

Tel: 416- 638-9554

Fax: 416- 638-9584

REAGAN RENOVATION



Basement திருத்த வேலைகள்.

Tiles பதிப்பதற்கு

Interlocking,

வீட்டிற்குரிய திருத்த வேலைகளிற்கு

அழையுங்கள் (416) 286-5026



HOME RENOVATION

சகலவிதமான வீட்டத் திருத்த வேலைகளிற்கும் அழையுங்கள்



PREM

Res: 284-2994

Cell 918-0972



YARL WINDOW COVERING

1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..

- VENETIAN BLINDS
- VERTICAL BLINDS
- ROLLER BLINDS
- PLEATED SHADES
- DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்

(416) 383-0205

(416) 650-0377

FREE ESTIMATE

## பல்லுப்போனால் சொல்லுப் போகுமா?

Dr. M. உமா
பல்வைத்திய நிபுணர்

### முரசு வியாதியை தடுப்பதற்கு நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை



**Burshing:** சரியான பல் துலக்கும் முறையை கையாண்டு தினமும் பல் துலக்குவதன் மூலம் பற்களில் காணப்படும் பிளாக்கினை (Plaque) அகற்றுதல்.
ஒரு நாளைக்கு இருதடவையாவது சரியான பல்துலக்கும் முறையை கையாண்டு பற்களை சுத்தம் செய்யுங்கள்.

**Flossing:** Brushing மூலம் பற்களிற்கு இடையில் அழுக்குகள் முற்றாக அகற்றப்பட மாட்டாது. இதனை அகற்றுவதற்கு Floss எனச் சொல்லப்படும் ஒரு வகையான 'Dental நூல்'ஐ பாவியுங்கள். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது Flossing ஐ செய்து பற்சுகாதாரத்தை பேணுங்கள்.

